பள்ளியாக நிலை உயர்த்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இருந்தாலும் மலைவாழ் பகுதியாக இருக்கின்ற இந்த இடத்திலே அவ்வளவு மலைவாழ் மாணவ, மாணவிகள் இல்லை. அந்த மலைவாழ் மக்கள் படிக்கக்கூடிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் பகுதியில் படிக்கின்ற மாணவர்களுக்கு அனைத்து உதவிகளையும் இந்த அரசு செய்யத் தயாராக இருக்கிறது. ஆகவே, சில விதிமுறைகள் இருந்தாலும்கூட தேவைக்கு ஏற்ப, அந்தப் பகுதியின், சூழ்நிலைக்கு ஏற்ப, மலைவாழ் மக்களுக்குச் சில விதிமுறைகளைத் தளர்த்தியும் சில திட்டங்களைச் செயல்படுத்த முன்வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல இவற்றையும் நாங்கள் விதிமுறைகளைத் தளர்வுசெய்து தேவைப்படும்போது நிதிநிலைக்கு ஏற்ப செயல்படுத்துவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 43, டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

43—

கிராமக் கோவில்களில் பூசை

***4187—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமக் கோவில்களில் அரசு மானியம் மூலம் அன்றாடம் நடத்திவந்த பூசையை மீண்டும் ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமக் கோயில்களில் அரசு மானியம் மூலம் ஒரு கால பூசைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. தமிழ்நாட்டில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின் கீழுள்ள திருக்கோயில்களில் ஒரு கால

2002 ஏப்ரல் 1]

பூசையாவது தவறாது நடைபெற வேண்டும் எனக் கருதி, ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் பொதுமக்கள் பங்காக ரூ. 2,500 நன்கொடை மூலம் பெற்றும், பாக்கித் தொகை ரூ. 22,500 நிதிவசதியுள்ள திருக்கோயில்களிலிருந்தும் திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி மற்றும் ஆலய மேம்பாட்டு நிதியிலிருந்தும் பெற்றும் மொத்தம் ரூ.25,000 திருக்கோயில் பெயரில் நிரந்தர முதலீடு செய்து, அந்த முதலீட்டினால் மாதந்தோறும் கிடைக்கப்பெறும் வட்டியிலிருந்து தினசரி ஒரு கால பூசை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள, எனது குளத்தூர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். அந்தத் தொகுதியில் உள்ள பல கிராமக் கோயில்கள் ஒரு கால பூசை கூட நடத்தப்பெறாமல் மிகவும் பாழடைந்து இருக்கின்றன. இந்த ஆண்டு ஒரு கால பூசை நடத்துவதற்கு குளத்தூர் தொகுதியில் எத்தனை கோயில்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கின்றன என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தின் மூலம் இதுவரை மொத்தம் 8242 திருக்கோயில்கள் பயன்பட்டு வருகின்றன. தற்போது தமிழ்நாட்டில் ஒரு கால பூசை நடைபெறாத திருக்கோயில்கள் 2063 உள்ளன எனக் கண்டறியப்பட்டு, முதற்கண் ஆயிரம் திருக்கோயில்களுக்கு வைப்பு நிதி ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி க. பாலபாரதி.

செல்வி க. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற அரசுக் கோயில்களிலும், நகர்ப்புறக் கோயில்களிலும் பூசை செய்வதற்கு ஆண்கள்தான் நியமிக்கப்படுகிறார்கள். ஆணும் பெண்ணும் சரிசமமாக உள்ள தமிழகத்தில் பெண்களை இந்தப் பணியில் அரசு நியமிக்குமா? தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இதிலே அரசு இடம் தர முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் செயல் அலுவலராகப் பணியாற்ற ஆண்கள் மட்டும்தான் பணிக்கு வேண்டும் என்று அரசுத் தேர்வாணைக் குழுமத்திற்கு அனுப்பப்பட்டது. வழக்கு போட்ட பின்னாலே

பெண்களுக்கும் அங்கே உரிமை உண்டு என்று தெரிவிக்கப்பட்டு இப்போது அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. அதைப்போலவே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூறியுள்ள கோரிக்கையை அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 44. திரு. எஸ்.எம். பாலன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

44—

திருமண மண்டபம்

***6686—திரு. எஸ்.எம். பாலன்**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதியிலுள்ள அன்பில் மாரியம்மன் கோயில் வளாகத்தில் அறநிலையத் துறை சார்பில் திருமண மண்டபம் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இடவசதி இல்லாததால் திருமண மண்டபம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

திரு. எஸ்.எம். பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லால்குடி தொகுதியில் அன்பில் கிராமத்தில் மாரியம்மன் கோயில் வளாகத்தில் திருமண மண்டபம் கட்டினால் 25 கிராமத்து ஏழை எளிய மக்கள் பயன் அடைவார்கள். அத்துடன் அங்கே இடவசதியும் அதிகமாக இருக்கிறது; தண்ணீர் வசதியும் இருக்கிறது. அத்தோடு ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதர் திருக்கோயிலினுடைய நிர்வாகத்தின்கீழ் வருவதால் அங்கே நிதிவசதி பெறுவதற்கு வழி இருக்கிறது. சமயபுரம் மாரியம்மன் கோயில், மலைக்கோட்டை உச்சிப்பிள்ளையார் கோயில் ஆகிய நிர்வாகங்களிலேயிருந்து கடன் வசதி பெற்று இந்தத் திருமண மண்டபத்தைக் கட்டித்தர ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.